பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

எஸ்லோன்பைப் வகைகளையும் வீட்டுப் பாவனைக் கேற்ற மின் உபகரணங்களையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

119 [297] பலாலி றோட், திருநெல்வேலி.

(ஆலடிச் சந்திக்கு அருகாமையில்)

# உதயன்

விலை ரூபா 3-50

எஸ்லோன்பைப் வகைகளையும்வீட்டுப் பாவனைக்கேற்ற மின் உபகரணங்களையும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

119 [297]பலாலி றோட், திருநெல்வேலி.

(ஆலடிச் சந்திக்கு, அருகாமையில்)

கடர் 5: பிரமோதூத ஹூ ஆடி மீ 12 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 05 (28-07-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 147

## ★ வடக்கு, கிழக்கில்

# யுத்தத்தை நிறுத்த இலங்கையுடன் இந்தியா பேச்சு!

## ஜனாதிபதி வெங்கட்ராமன் தகவல்

புதுடில்லி, ஜூலை 28

இலங்கையின் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் யுத்தத்தை நிறுத்துவதற்கு, இந்தியா இலங்கை அரசுடன் தீவிரமாகக் கலந்தாலோசித்து வருகிறது.

இந்தத் தகவலை இந்திய ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் நேற்று வெளியிட்டார்.

புதுடில்லியில் மாநில ஆளுநர்களின் இரண்டு நாள் மாநாட்டை தொடக்கி வைத்துப் பேசுகையிலேயே திரு. வெங்கட்ராமன் முன்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி வெங்கட்ராமன் மேலும் சொன்னதாவது:-

இலங்கையின் தமிழ்ப் பகுதிகளில் இலங்கை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் யுத்தத்தில் மக்கள் மடிவது குறித்து இந்தியா கவலை கொண்டுள்ளது.

வடக்கு- கிழக்கு சண்டை காரணமாக இலங்கைத்தமிழ் அகதிகள் பெருமளவில் இந்தியாவுக்கு வருகின்றனர்.

இதனால் மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு பிரச்சினை ஏற்படுகிறது. இது இந்தியாவைப் பெரிதும் பாதிக்கிறது.

இலங்கையில் இருந்து அமைதிப்படை விலக்கிக் கொள்ளப்பட்டதும், அங்கு அமைதியை நிலைநாட்டவும் வடக்கு- கிழக்கு மாகாணத்திற்கு போதிய அதிகாரங்களை வழங்கவும் இலங்கைத் தமிழருக்குப் போதிய பாதுகாப்புக் கிடைக்கவும் அனைத்துத் தரப்பினரும் தேவையான நடவடிக்கைகள் எடுப்பர் என்று இந்தியா நம்பியிருந்தது.

இலங்கை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இப்போது நடைபெறும் யுத்தம் முடிவுற இந்தியா இலங்கை அரசுடன் தீவிரமாக கலந்தாலோசித்து வருகிறது - என்றார். [அ-எ]

## ஜீ. சி. ஈ. (சா. த.) பரீட்சை முடிவுகள் வந்து சேர்ந்தன!

யாழ்ப்பாணம், ஜூலை 28

ஜீ. சி. ஈ. [சாதாரணதரப்] பரீட்சை முடிவுகள் நேற்று மாலை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

கடந்த ஏப்ரல் 6 ஆம் திகதி நடைபெற்ற இந்தப் பரீட்சை முடிவுகள் கடந்த 23 ஆம் திகதி கொழும்பில் வெளியானது.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டு யாழ். மாவட்டத்துக்குரிய பரீட்சை முடிவுகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தம்பாட்டியை நோக்கி நேற்று ஷெல் தாக்குதல்

காரைநகர் கடற்படை முகாமிலிருந்துநேற்றுக்காலை முதல் மாலைவரை தம்பாட்டிப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டன.

இதேவேளை இந்தப் பகுதிகளில் நேற்று இரண்டு பொம்மர்கள் குண்டுவீச்சுத்தாக்குதல்களையும் மேற்கொண்டதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதல்களினால் ஏற்பட்ட சேதவிவரங்கள் பற்றி தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (உ-9)

### மட்டக்களப்பு சந்தனமடுவில்

## அகதிகளை கேடயமாக வைத்து படையினர் முன்னேற முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 28

மட்டக்களப்பு சந்தனமடுப் பகுதியில் உள்ள அகதிகளைக் கேடயமாக கொண்டு ஸ்ரீ லங்கா இராணுவத்தினர் முன்னேற முயற்சி எடுத்து வருவதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 26 ஆம் திகதி ஊறணியில் இருந்து சந்தனமடு என்ற இடத்துக்கு சென்ற இராணுவத்தினர் அங்குள்ள அகதிகள் முகாம் ஒன்றுக்கு சென்று அகதிகள் அனைவரையும் கைது செய்தனர்.

தொடர்ந்து அவர்களை தம்முடன் கூட்டிக் கொண்டு முன்னேறுவதற்கான ஆயத்தங்களை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

### கடும் சண்டை

இதேவேளை புணானை, பெண்டுகள்சேனை, தன்னாமுனை ஆகிய இடங்களில் விடுதலைப்புலிகளுக்கும்-இராணுவத்துக்கும் இடையில் கடும் சண்டை மூண்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-9]

### ஊரடங்கு நீக்கம்

கடந்த திங்கட்கிழமை காலை முதல் கிளிநொச்சி நிர்வாக மாவட்டத்தில் அமுலில் இருந்து வந்த ஊரடங்குச் சட்டம் நேற்று நண்பகல் 12 மணியுடன் நீக்கப்பட்டு விட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது.

### கோட்டையில் காயமுற்றோரை விடுவிக்க

# புலிகளின் நிபந்தனையை அரசு நிராகரித்தது என்கிறார் ரஞ்சன்

கொழும்பு, ஜூலை 28

யாழ். கோட்டை முகாமிற்குள் காயமடைந்துள்ள ஆயுதப் படையினரை வெளியேற்ற வேண்டுமாயின் குடாநாட்டில் யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிக்கும்படி விடுதலைப் புலிகள் கோரியதாகவும்—

அதனை இலங்கை அரசு நிராகரித்துவிட்டதாகவும் இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

வாராந்திர செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இத் தகவலை வெளியிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் தீவில் ஒரு லட்சம் அகதிகளை தங்க வைக்கக் கூடிய பாரிய அகதிகள் முகாம் ஒன்றை நிறுவுவது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்பு கொண்டனர்.

அப்போது ''யுத்த நிறுத்தம் வேண்டும்; சண்டையைத் தொடர்ந்து மூடப்பட்ட

(3 ஆம் பக்கம் பார்க்க)

# நிபந்தனையே விதிக்கவில்லை என்கின்றனர் விடுதலைப் புலிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். கோட்டையினுள் கடுமையாகக் காயமடைந்திருக்கும் ஸ்ரீலங்காப் படையினரை அங்கிருந்து அகற்ற ஸ்ரீலங்கா அரசு விரும்பிய போது அதற்கு நாம் எவ்வித நிபந்தனையும் வழங்காமல் இணங்கினோம்.

-இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டிருப்பதாவது:-

கடந்த ஜூலை 20 ஆம் திகதியன்று சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க உதவியோடு காயமடைந்த சிங்களப் படையினரை அரசு அகற்ற முயன்ற போது, நாம் எவ்வித நிபந்தனையும் இன்றி, தரைமார்க்கமாக அவர்களை எடுத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் - மாதகல் பகுதி கடல் பரப்பிலிருந்து தாக்கு

காங்கேசன்துறை, மாதகல் கடற் பகுதியில் இருந்து பீரங்கிக் கப்பல்கள் கிராமப் பகுதிகளை நோக்கி நேற்று காலையிலும், பகலிலும் தாக்குதல் நடத்தின.

இதனால் கடற்கரைக்கு சமீபமாக உள்ள வீடுகள் மட்டுமல்ல, ஒரு மைலுக்கு அப்பால் உள்ள வீடுகளும் சேதமடைந்தன.

இதைத் தொடர்ந்து கொல்லன் கலட்டி, ளானை, தெல்லிப்பழை மக்கள் இடம் பெயருகிறார்கள்.

பலாலியில் இருந்து இடை இடையே ஷெல்களும் வீசப் பட்டன.

இந்த ஷெல் வீச்சால் தெல்லிப்பழை உப- அலுவலகத்தில் சேதம் ஏற்பட்டது. (இ-68)

### சுபநேரம்

28- 7- 90

சனிக்கிழமை ஆடி 12

சுபநேரம்: 03-02— 04-32

இராகுகலம் 09-02—10-32

## விமானக் குண்டு வீச்சினால் பஸ் நிலையப் பகுதி சேதம்

### கஸ்தூரியார் வீதியிலும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

நேற்றுக்காலை 7-20 மணியளவில் யாழ். நகரில் பொம்மர் ஒன்று நடத்திய திடீர் தாக்குதலில் கஸ்தூரியார் வீதியில் மூன்று கடைகள் சேதமடைந்தன.

நேற்று மாலை 6-30 மணி முதல் 7 மணிவரை கோட்டை பகுதியில் விமானங்கள் குண்டு வீச்சு நடத்தியதோடு, கோட்டை முகாமுக்கு உணவு மற்றும் பொருள்கள் அடங்கிய பொதிகளையும் போட்டன.

மாலையில் யாழ். பஸ் நிலையப்பகுதியிலும் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனால் பஸ் நிலையப்பகுதி மிகமோசமாகப் பாதிக்கப் பட்டது. பல கடைகள் சேதமாகின.

இதேவேளை நேற்றிரவு குண்டு வீசுவதற்காக விமானங்கள் தாழ இறங்கியபோது அவற்றை நோக்கி நிலத்திலிருந்து றேசர் குண்டுகள் தீர்க்கப்பட்டன. சிவப்பு நிறத்தில் நெருப்புக் கோள

(3 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



உந்த முயற்சியும் வெற்றி அளிக்கும் எண்டு என்ன நம்பிக்கை பாருங்கோ......!

## பலாலி ஷெல் யாழ். நகரில் வெடித்தன

யாழ்ப்பாணம், ஜூலை 28

நேற்று மாலை யாழ் நகரில் விமானக் குண்டுவீச்சு நடந்தகையோடு பலாலியில் இருந்து யாழ் நகரை நோக்கி ''ஆட்லறி''ஷெல்தாக்குதல் ஆரம்பமானது.

இரவிரவாக இந்தத் தாக்குதல் தொடர்ந்தது. அனேகமான ஷெல்கள் யாழ். கோட்டைப் பகுதியிலேயே விழுந்து வெடித்தன. (ஒ)

## கடற் கோட்டையில் துருப்புகள் குவிப்பு?

யாழ்ப்பாணம், ஜூலை 28

காரைநகர் கடற்படை முகாமில் தொடர்ந்து துருப்புகள் குவிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

கப்பல்கள் மூலம் கொண்டு வரப்படும் துருப்புகள் ஊர்காவற்றுறை கடற்கோட்டையில் குவிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## பலாலி, காங்கேசனில் நேற்றும் கடும் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 28

காங்கேசன்துறை, பலாலிப் பகுதிகளில் நேற்றும் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படையினருக்கும் இடையில் தொடர்ந்து கடும் மோதல் இடம் பெற்றது.

பலாலி முகாமிலிருந்து மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி இடைவிடாது ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டதாகவும் கூறப்பட்டது.

ஆனால் ஏற்பட்ட சேதவிவரங்கள் பற்றிய தகவல்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரியவரவில்லை. (உ)

### திருமலை தென்னமரவாடியில்

## ராணுவ காவல் அரண் சேதம்; சிப்பாய்கள் இருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

திருகோணமலை, தென்னமரவாடியில் 10 ஆம் கட்டையடியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரின் காவல் அரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் (வியாழன்) தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் காவல் அரண் முற்றாகச் சேதமடைந்தது. இரண்டு சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இராணுவத்திடம் இருந்து ரி-81 ஒன்று, மகஸீன் — 5, ரவைகள் — 150, ரி-81 எறிகுண்டு — 1, ஹோல்சர் — 2, சப்பாத்து— 6 சோடி, தலைக்கவசம்—5 என்பன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## வல்லைவெளியில் மினி பஸ்ஸை ஹெலி துரத்தித் தாக்கியது!

அச்சுவேலி, ஜூலை 28

வல்லைவெளியில் மினிபஸ் ஒன்றை ஹெலிக்கொப்டர் துரத்தித்தாக்கியது. சாரதியின்சாதுரியத்தால் பயணிகள் காயம்இன்றித் தப்பினர். மினி பஸ் சேதமடைந்தது.

இச்சம்பவம் புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

நெல்லியடியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த மினி பஸ்ஸே தாக்குதலுக்கு உள்ளானது. (இ-11)

## கிளிநொச்சி - பரந்தனில் நேற்றும் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 28

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் தொடர்ந்து விமானங்களிலிருந்து குண்டுவீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இதேவேளை ஆனையிறவு முகாமிலிருந்தும் இப்பகுதிகளை நோக்கி பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

நேற்று பரந்தன் பகுதியில் அவ்ரோவிலிருந்து வீசப்பட்ட குண்டுகளினால் 4 கடைகள் எரிந்துள்ளன என்றும்-

ஆனையிறவிலிருந்து ஏவப்பட்ட ''ஆட்லறி'' ஷெல்களினால் பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளில் சில கடைகள் எரிந்த வண்ணமிருப்பதாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் நேற்றிரவு மேலும் தெரிவித்தன. (உ-9)

## யாழ். நிலைமை குறித்து விரிவான அறிக்கை

### செஞ்சிலுவைச் சங்கம் அனுப்பியது

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்ப்பாண நிலைமை குறித்து விரிவாக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு இலங்கை செஞ்சிலுவைச்சங்க தலைமையகம் அதன் யாழ் கிளையைக் கோரியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வைத்திய சிகிச்சை,ஆஸ்பத்திரிகள்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய் பகுதியில் நேற்று குண்டுவீச்சு, ஹெலித் தாக்கு

மானிப்பாய் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின. ஹெலிக்கொப்டரும் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது.

குண்டு வீச்சால் மானிப்பாய் பகுதியில் வீடுகள், கட்டடங்கள் அதிர்ந்தன.

சுமார் அரை மணித்தியாலம் நடந்த இந்தத் தாக்குதலில் உடல், உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என அஞ்சப்பட்டது.

மானிப்பாயில் யாழ் போதனா வைத்திய சாலை இயங்கும்பகுதி மற்றும் கிறிஸ்தவ தேவாலயம் ஆகிய இடங்களுக்குச் சமீபமாகவே இத் தாக்குதல்கள் இடம்பெற்றன எனத் தெரிய வருகிறது. (ஒ)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எம்மிடம் சுத்தமான முறைப்படி தயார் செய்யப்பட்ட முட்டையிடும் கோழிகளுக்கான தீனி, (Layer mash) விற்பனைக்கு உண்டு. No:12 கனகசபைலேன் (யாழ். இந்துக் கல்லூரிக்குப் பின்பக்கம்) K. K. S. வீதி யாழ்ப்பாணம். (13833)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கு உகந்த நல்ல இன சேவல்கள் விற்பனைக்கு உண்டு. விலைகுறைக்கப்பட்டுள்ளது. சற்குணராஜா அன் பிறதர்ஸ். பிரம்படி லேன், கொக்குவில். (சி/5277)

### தேவை

சாவகச்சேரி முஹியிதீன் ஜும்மா பள்ளிவாசலுக்கு பேஷ் இமாமும் முஅத்தீனும் உடனடியாகத் தேவை. சான்றிதழ்களுடன் தர்மகர்த்தா சபையினருடன் தொடர்பு கொள்ளவும். (13836)

சிறிய குடும்பத்திற்கு வீட்டு வேலைகளில் உதவி செய்யக் கூடிய நற்பழக்கமுள்ள ஒருவர் தேவை. 60 வயதுக்கு மேற்பட்டவராய் இருத்தல் விரும்பத்தக்கது தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி திரு. கே. விக்னராஜா 22/1, விதானையார் வீதி, சுண்டுக்குளி. (சி-5288)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சனி, ஞாயிறு ஆங்கில வகுப்புகள் நடத்தப்படுகின்றன. தனிப்பட்ட முறையிலும் உங்கள் வீடுகளிலும், மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்களுக்கும் கற்பிக்கப்படும். தொடர்பு:- சனி, ஞாயிறு தினங்கள் அல்லது கடிதமூலம் S. ஜெயராஜா, கல்யாணி ஆங்கிலக் கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (3912)

## அகதிமுகாம் குழந்தைகளுக்கு பால்மா, சீனி

யாழ்ப்பாணம், ஜூலை 28 முல்லைத்திவு மாவட்டத்திலுள்ள ஐந்து வயதுக்குட்பட்ட அகதிக்குழந்தைகளுக்கு கால்கிலோ சீனியையும், நெஸ்பிறே பால்மாவையும் சர்வோதயம் வழங்கியது.

அகதி முகாம்களில் உள்ள குழந்தைகளுக்கே இந்தச் சலுகை வழங்கப்பட்டது, (ஒ-3)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு.
சி. க. பேரம்பலம்
(ஆசிரியர்)

மலர்வு:
12 — 10 -- 1931
உதிர்வு:
24 — 07 1985

திதி: 28 - 07 - 1990

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் நினைவுடன் வாழும்:

மனைவி,
பிள்ளைகள்.

''லக்சுமி வாசா''
சங்கானை.

[சி-5287]

## இலங்கை பெண்களுக்கான தடை நீக்கம்

கொழும்பு, ஜூலை 28 குவைத்நாட்டுக்கு தொழில் வாய்ப்புப் பெற்று இலங்கைப் பெண்கள் செல்வதற்கு கடந்த மாதம் அரசாங்கம் விதித்த தடை நீக்கப்பட்டு விட்டது.

எதிர் வரும் ஆகஸ்ட் முதலாம் திகதியில் இருந்து இலங்கைப் பெண்கள் குவைத்துக்கு செல்ல அனுமதி அளிப்பது என்று அரசு தீர்மானித்து உள்ளது.

குவைத்தில் உள்ள தொழில் ஏஜென்ஸிகளுடன் வீட்டுப் பணிப்பெண்ணாக தொழில் பார்க்கச் செல்லும் ஒவ்வொரு இலங்கையரும் அங்குள்ள இலங்கைத் தூதரக அதிகாரி முன்னிலையில் உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் என்று தொழில் அமைச்சு நிபந்தனை விதித்து உள்ளது.

## படை அதிகாரி மரணம்

கொழும்பு, ஜூலை 28 ஏறாவூரில் நடந்த மோதல் ஒன்றில் இலங்கை ஆயுதப் படையின் கப்டன் தரத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டார்.

ஆறு படையினர் காயமடைந்தனர். என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது. (இ-எ)

# இடம் பெயர்ந்த ஆசிரியருக்கான முற்பணம் ஆகஸ்ட் முதல் வாரம்

யாழ்ப்பாணம் ஜூலை 28 யாழ் - மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்துள்ள வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கு ஜூலை மாதச் சம்பள முற்பணமாக ஆயிரம் ரூபா வழங்க யாழ்-கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு-கிழக்குப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து இங்கு வந்துள்ள ஆசிரியர்களுக்கும்-

வெளிமாவட்டங்களில் இருந்து கடமைலீவில் வந்து திரும்ப முடியாதுள்ள ஆசிரியர்களுக்குமே இந்த முற்பணம் வழங்கப்பட இருக்கிறது.

முற்பணம் பெறத் தகுதியுடைய ஆசிரியர்கள் எதிர் வரும் 30, 31 ஆகஸ்ட் 1 ஆம் திகதிகளில் யாழ். கல்வி அலுவலகங்களில் சமூகமளித்து விசேட படிவத்தைப் பெற்று அந்த அந்த மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்துள்ள பதவிநிலை அதிகாரிகளின் சிபார்சுடன் முதலாம் திகதி புதன் கிழமைக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும் என்று கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஆகஸ்ட் ஏழாம் திகதிக்கு முன்பாக இவர்களுக்கு முற்பணம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## பெற்றோர் தாமாக விரும்பி பயிற்சிக்கு அனுப்பவேண்டும்

### புளியங்கூடல் கூட்டத்தில் உரை

வேலணை, ஜூலை 27 தற்போதைய காலகட்டத்தில் எமது பெற்றோர்கள் தாங்களாகவே உணர்ந்து தமது பிள்ளைகளை இயக்கத்துக்கோ அல்லது தற்பாதுகாப்புப் பயிற்சிக்கோ போகும்படி கூற வேண்டும்.

மேற்கண்டவாறு தெரிவித்தார் ஊர்காவற்றுறை தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல்பொறுப்பாளர் செல்வா.

வல்வைக் கடலில் வீரமரணமடைந்த வீரவேங்கைகளுக்கு அஞ்சலி தெரிவித்து புளியங்கூடல் சிற்றூரவைத் தலைவர் திரு. எஸ். தர்மலிங்கம் தலைமையில் புளியங்கூடல சந்தியில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் செல்வா உரையாற்றினார்.

தற்பாதுகாப்பு பயிற்சிக்கு பெற்றோர்கள் பிள்ளைகளை தயக்கமின்றி அனுப்பிவைத்து போராட்டத்தில் எல்லா மக்களும் பங்குபற்றி போராளிகளின் கையைப் பலப்படுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

அஞ்சலிக்கூட்டத்தில் தீவுப் பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. நரேஸ் உட்பட பல பிரமுகர்கள் உரையாற்றினார்கள். (இ- 167)

## ஆசிரியர் இடமாற்றம்

கொழும்பு, ஜூலை 28 அடுத்த ஆண்டுக்கான ஆசிரிய இடமாற்றம் பெறுவதற்காக விண்ணப்பங்களை அனுப்புவது எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இது சம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்றைக் கல்விச் சேவைகள் ஆணைக்குழுத் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் நாட்டில் உள்ள சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார். (இ-எ)

## தற்காப்பு பயிற்சி வகுப்பு: சகல மாணவர்களும் கலந்து கொள்ள முடியும்

காங்கேசன்துறை, ஜூலை 28 ''யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் முதலுதவி, தற்காப்பு பயிற்சி வகுப்புகளில் முறைசாராக் கல்வி மாணவர்கள் மட்டுமன்றி ஏனைய மாணவர்களும் பங்குபற்றலாம். இப் பயிற்சியை பெறுவோருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும்''

இவ்வாறுவடமாநில முறைசாராக் கல்வி அதிகாரி திரு. ச. சுப்பிரமணியம் கூறினார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் மேற் படி பயிற்சி வகுப்பை 22 ஆம் திகதி ஆரம்பித்து வைத்துப் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இப்பகுதியில் உள்ள பல பாடசாலைகளையும் சேர்ந்த ஆயிரத்திற்கதிகமான மாணவ மாணவியர் இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே யாழ். கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் 180 மாணவர்களுக்கும், நல்லூர் சாதனா பாடசாலையில் 185 மாணவர்களுக்கும், புத்தூர் சோமாஸ்கந்தகல்லூரியில் 80 மாணவர்களுக்கும் இப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, ஆகியவற்றில் இப்பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதாகவும் இம்மாத இறுதிவரை இவ்வகுப்புகள் நடைபெறும் என்றும்

அவர் கூறினார். (இ-68)

## அறிவித்தல்

''சாந்திகம்''
**உளவளத்துணை நிலையம்,**
**21, முதலாம் குறுக்குத் தெரு,**
**யாழ்ப்பாணம்.**

சாந்திகத்தில் நடைபெற்ற உளவளத்துணை தற்காலிகமாக மீண்டும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் 01-08-1990 ஆம் திகதி முதல் காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை தினந்தோறும் நடைபெறும் என்பதை உளவளத்துணை வேண்டியவருக்கு அறியத் தருகின்றோம்.

தலைவர்

[13839]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

செல்வன்
**சாந்திரட்னம் விஜயபிரகாஷ்**
(H. N. D. A. 2 ஆம் வருடம்,
யாழ். தொழிநுட்பக் கல்லூரி மாணவன்)

| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 1968- 10- 11 | 1990- 06- 28 |

எங்கள் அன்பு விஜயபிரகாஷ்
நீ எங்களை
''சில்லென்று பூத்த
சிறு நெருஞ்சிக் காட்டினிலே
நில்லென்று எமைத்
தவிக்கவிட்டு எங்குதான் சென்றாயோ
நீ இல்லாமல் பசுமையான
பல் தொழிநுட்பக் கல்லூரி மாணவர்
கதி கலங்கி கண்ணீரஞ்சலி செலுத்துகிறோம்''

உயர் வணிக மாணவர் மன்றம் (பகல்),
யாழ்/ தொழிநுட்பக் கல்லூரி,
கொக்குவில்.

(13838)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
30- 04- 1968

அரவத்தின் பிடியில்:
08- 08- 1989

**நாகராசா மதனராஜன்**

ஆண்டு ஒன்று சென்றாலும் நீ எம்மோடு வாழ்ந்த நாட்கள் இன்றும் எம் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன. ஆண்டுகள் நூறு ஆனாலும் எங்களை விட்டு அழியாது உன் நினைவு. உனது ஆத்மா சாந்தியடைய தவமியற்றி தொழுது தினமும் கண்ணீரால் அஞ்சலி செலுத்துகின்றோம்.

உன் பிரிவால் தவிக்கும்;

அன்பு அப்பா, அக்கா,
தங்கை, தம்பி, உறவினர்கள்,

சம்பியன் லேன்,
கொக்குவில்.

## நினைவஞ்சலிகள்

### 7ஆம் ஆண்டு



திரு.
ந. நவரத்தினராசா
(T. O)

மலர்வு: 05 - 06 - 1953
உதிர்வு: 28 - 07 - 1983

### 6ஆம் ஆண்டு



செல்வி
ந. ருக்மணி

மலர்வு: 09 - 04 - 1962
உதிர்வு: 28 - 07 - 1984

### 5ஆம் ஆண்டு

திருமதி க. இலட்சுமிப்பிள்ளை

மலர்வு: 02 - 02 - 1914 உதிர்வு: 12 - 12 - 1985

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

- குடும்பத்தினர்

[illegible]

[13809]

## தசாக கிரஞ்ஞ ஆத்மசாந்தி வைபவ அழைப்பு

அன்புடையீர்!

20-07-1990 அன்று இறைமையடைந்த எமதுதந்தையார்

**பிரம்மஸ்ரீ து. குமாரசாமி ஐயர்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர் - புன்னாலைக்கட்டுவன்)

அவர்களின் மறைவை முன்னிட்டு நடைபெறும் கீழ்க்காணும் வைபவங்களில் கலந்து, அவரது ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

| | | |
| --- | --- | --- |
| தசாகம்: | 29 - 07 - 1990 | ஞாயிற்றுக்கிழமை |
| ஏகோதிஷ்டம்: | 30 - 07 - 1990 | திங்கட்கிழமை |
| மாசிகம்: | 31 - 07 - 1990 | செவ்வாய்க்கிழமை |
| சபிண்டீகரணம்: | 01 - 08 - 1990 | புதன்கிழமை |
| கிரகஞ்ஞம்: | 02 - 08 - 1990 | வியாழக்கிழமை |

இங்ஙனம்:

திருமதி குமாரசாமி ஐயர்,
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் (மகன்)
பிரம்மஸ்ரீ சோ. பாலகிருஷ்ணசர்மா (மருகர்)

புன்னாலைக்கட்டுவன்,
23 - 07 - 1990

(13831)

## 31 ஆம் நாள் இதய அஞ்சலி

ஈழத்தில்:
26- 07- 1971

இதயத்தில்:
27- 06- 1990



**இம்மானுவேல் பத்மன்**
(பத்தா)

வழமை போல் ஒரு புதிய நாளின் ஜனனம்
அஸ்தமனத்தில் தான் அது நிகழ்ந்தது
வாழப் பிறந்தவன் - வாழ்ந்திருக்க வேண்டியவன்
பறிக்கப்பட்டாய் பலவந்தமாக

வாழ்ந்திருந்த நாளிலே செய்திருந்த சங்கதிகள்
செய்யவென்று நீ கொண்டிருந்த கற்பனைகள்
நிதர்சனமாக நிதம் எமை வருத்த
எல்லாம் மறந்துவிட்டு எப்படித்தான்
உறங்குகின்றாய்

இங்கு உணர்வுகள் இருக்குமட்டும்- எம்
பத்தா நீ இருப்பாய் - எங்கள்
உறவுகளின் காவலனாய்
எந்நாளும் வாழ்ந்திருப்பாய்!

உன் பிரிவால் வருந்தும்:

பெற்றோர், அண்ணன், தம்பிமார்,
தங்கைமார், உறவினர்.

13814

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**திருமதி செல்வநாயகி அம்மா சித்திரவேல்**
(வல்வெட்டித்துறை)

| அன்னை மடியில்: | ஆண்டவன் அடியில்: |
| --- | --- |
| 2 - 3 - 1924 | 29 - 6 - 1990 |

அன்புடனும் பாசத்துடனும் எம்முடன் வாழ்ந்த இனிய தாயே உங்கள் நினைவுகள் எம் நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காது.

29 - 6 - 90 அன்று நடைபெற்ற அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு 29 - 7 - 90 அன்று வீட்டில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

'செல்வ பவனம்'
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.

(13829)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அவர்களை விட மோசமானவர்கள்

தெற்கிலிருந்து வரும் லக்ஸபான மின்சாரம் குடாநாட்டுக்கு இப்போது கிடைப்பதில்லை. யுத்தம் தொடரும் வரை அது கிடைப்பதற்கான சாத்தியமும் குறைவு.

மின்சாரம் இல்லாக் குறையைச் சிறு அளவிலேனும் ஈடுசெய்யும் விதத்தில் சுன்னாகம் மின்நிலையத்தில் ஜெனரேட்டர் மூலம் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. உள்ளதைப் பகுத்துண்ணும் பாங்கில் குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் ஒன்றுவிட்ட ஒரு நாள் ஒரு மணித்தியாலம் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது.

அவ்வாறு சுழற்சிமுறை மின்சாரம் வழங்குவதற்கு "ஹெவி டீசல்" எனப்படும் எரிபொருள் தேவை. சுன்னாகம் மின்நிலையத்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் அந்த எரிபொருள், சுழற்சி முறையில் மின்சாரத்தை வழங்குவதானாலும்ஒரு மாதத்துக்கேபோதுமானது என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நிலைமை இப்படியிருக்க, மின்நிலையத்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் "ஹெவி டீசல்" களவாடப்படுவதாகச் செய்தி வந்துள்ளது! பொதுநலனில் குடாநாட்டு மக்கள் எவ்வளவுக்கு "அக்கறையுள்ளவர்கள்" என்பதை இது எடுத்துக் காட்டுகிறது!!

நெருக்கடியான காலங்களில், மக்கள் கஷ்டப்படும் போது, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமது நலனை மட்டும் நாடி சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களே தமிழர்களில் அனேகர். தவித்த முயல் அடிக்கும் பாவிகளாகவே பலரும் இருக்கிறார்கள். இது பெரிதும் வெட்கத்துக்குரிய ஒன்றாகும்.

இவ்வேளைகளில் பொது நலனில் அக்கறை காட்டுவோரும், சகோதர உணர்வுடன் நிலைமையை நோக்கி மற்றவர்களுக்கு உதவுவோரும், மனிதாபிமானத்துடன் நடந்துகொள்வோரும் மிக மிகச் சிலரே.

சுயநலம் மற்றவர்களுக்குக் கெடுதல் விளைவிப்பதாக இல்லாமல் இருந்தால் ஓரளவேனும் சகித்துக் கொள்ளலாம். ஆனால் அது பொதுநலத்தைக் கெடுக்கும் போது,பாதிக்கும்போது அந்தச் சுயநலம் சமூக விரோதமாக மாறிவிடும். அதனைப் பொறுத்துக் கொள்ளமுடியாது; பொறுத்துக் கொள்ளவும் கூடாது.

இந்தவகையில், நெருக்கடி வேளைகளில், மக்கள் அல்லலுறும் வேளைகளில், பதுக்கல் செய்வோர், கொள்ளை லாபம் அடிப்போர், திருடுவோர், மக்களை ஏமாற்றுவோர், மக்களுக்கு உதவி செய்வதாகக் கூறி அவர்களுக்கு உபத்திரவம் கொடுப்போர், மக்கள் சொத்தைச் சூறையாடுவோர் ஆகியோர் இரட்டித்த சமூக விரோதிகளாகக் கருதப்பட வேண்டியவர்கள்.

தாமாகவும் திருந்தமாட்டார்கள், தண்டனை பெற்றும் திருந்தமாட்டார்கள் என்ற இந்த வகையினர் பல்கிப் பெருகினால் ஸ்ரீலங்கா அரசின் ஆயுதப் படைகள் இனஒழிப்புச் செய்வதற்கு முன்னர் தமிழர்கள் தாமாகவே அழிந்து விடுவர்.

முன்கண்ட வகையினர் அனைவரும் ஆயுதப்படையினரை விட மோசமானவர்கள் எனக் கருதப்படவேண்டியவர்களே! சட்டமும் ஒழுங்கும் இல்லை என்று நினைத்து மக்களை ஏமாற்ற நினைப்பவர்கள், கெடுதல் செய்ய நினைப்பவர்கள், தங்களைத் தாங்களே ஏமாற்றுகிறார்கள், கெடுக்கிறார்கள் என்பதை உணரட்டும். இந்த வினை இன்றில்லாவிடினும், இன்னும் சில காலத்திலாவது ஊழாக வந்து உருக்குலைக்கும் என்பதையும் மறந்து விடலாகாது. இந்த ஊழே தமிழர் சமுதாயத்தின் விமோசனத்துக்குத் தடைக்கல்லாக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# தென்மராட்சிப் பகுதிகளில் ஹெலித் தாக்குதல் அதிகரிப்பு

## அப்பாவி மக்கள் தினமும் பாதிப்பு

பச்சிலைப்பள்ளி, ஜூலை 28

தென்மராட்சிப் பகுதியில் பொதுமக்கள் மீது ஹெலிகள் தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளில் ஹெலித் தாக்குதல்கள் நாளாந்த சம்பவங்களாக மாறி வருகின்றன;

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் வியாழன் காலை ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒரு ஆசிரியரும் ரியூசனுக்குச் சென்று வந்த மாணவியும் காயமடைந்தனர்.

இவர்கள் இருவரும் அம்புலன்ஸ் மூலம் மானிப்பாய் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

வியாழன் மாலையும் ஹெலித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

புதன்கிழமை மாலை இடம்பெற்ற மற்றும் ஒரு தாக்குதலில் சாவகச்சேரியில் லொறி ஒன்றும் சைக்கிள்களும் சேதமடைந்தன;

கொடிகாமம் சந்தைப்பகுதியில் ஹெலியிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் சந்தை வியாபாரி ஒருவருக்கு தலையிலும் காலிலும் காயங்கள் ஏற்பட்டன. இவர் உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

வெளிநாட்டிற்குச் செல்வதற்காகக் கொழும்புக்குப் போக நேற்று வான் ஒன்றில் சென்றோர் மீது இத்தாவில் பகுதியில் ஹெலி தாக்குதல் நடத்தியது.

வானில் பயணம் செய்த சங்கானையைச் சேர்ந்த அ. இரத்தினகோபால் (வயது 34) என்பவருக்குத் தோளிலும். கையிலும் காயங்கள் ஏற்பட்டன. மந்திகை வைத்தியசாலைக்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டார்.

கொடிகாமத்தில் ஹெலி சுட்டதில் வ. சின்னப்பு (வயது 50) என்ற வயோதிபர் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அதேசமயம் செவ்வாய்க்கிழமை கொடிகாமத்திலிருந்து இயக்கச்சி வரை காலை முதல் மாலைவரை ஹெலியிலிருந்து பலதடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

பரந்தன் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்துகொண்டிருந்த மக்கள் மீது இயக்கச்சியில் நடத்தப்பட்ட ஹெலித் தாக்குதலின் போது இருவர் படுகாயமடைந்தனர்.

ஒருவருக்கு வயிற்றில் குண்டு பட்டு குடல் வெளியே வந்த நிலையிலும் மற்றவருக்குக் கையிலும் காலிலும் காயம் ஏற்பட்ட நிலையிலும் பளை வைத்தியசாலைக்குக்கொண்டு வரப்பட்டு மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

(இ - 117)

# இலங்கை தமிழ் அகதிகளுக்கு மேலும் 2 கோடி ரூபா

சென்னை, ஜூலை 28

தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு மறுவாழ்வளிக்கும் பணிகளை மேற்கொள்ள இந்திய மத்திய அரசு மேலும் இரண்டு கோடி ரூபாவை வழங்க அனுமதி அளித்துள்ளது.

தமிழக தலைமைச் செயலாளர் எம். எம். இராஜேந்திரன் மதுரையில் முன்கண்ட தகவலை செய்தியாளரிடம் வெளியிட்டார்.

இதுவரை இலங்கையில் இருந்து வந்த தமிழ் அகதிகளின் எண்ணிக்கை 40 ஆயிரம் ஆகும்.

இப்போது தினசரி 2 ஆயிரம் அகதிகள் வரையில் தமிழகத்துக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயம் மத்திய அரசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அகதிகளின் மறுவாழ்வுக்கென்று மத்திய அரசு ஒரு கோடி ரூபாவும் மாநில அரசு 2 கோடி ரூபாவும் இதுவரை செலவிட்டுள்ளன என்றும் திரு. இராஜேந்திரன் சொன்னார். (இ-எ)

# மாகாண சபைகளுக்கான அதிகாரப் பரவலாக்கல்

## சர்வகட்சி மாநாட்டில் ஆராய்வு

கொழும்பு, ஜூலை 28

கொழும்பில் வியாழனன்று நடந்த சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் மாகாண சபைகளுக்கான அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான விஷயங்கள் ஆராயப்பட்டன.

கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சிகள் இவ்விஷயம் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பித்தன.

சர்வகட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் இது வரை கலந்து கொள்ளாத அரசியல் கட்சிகளிடமிருந்தும் அதிகாரப்பரவலாக்கல் பற்றிய அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் வியாழன் நடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ-எ)

# மா ஏற்றிவரும் லொறிக்கு ஊக்குவிப்புப்பணம்

கொழும்பு, ஜூலை 28

திருகோணமலை, சீனன்வாடி பிரிமா ஆலைக்குச் சென்று கோதுமை மாவை ஏற்றிக் கொண்டு நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்லும் லொறி உரிமையாளர்களுக்கு 25 சத வீத ஊக்குவிப்புப் பணமும் போதிய பாதுகாப்பும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சீரற்ற பாதுகாப்பு நிலைமை காரணமாக பிரிமா மா ஆலைக்குச் சென்று மாவை ஏற்றி வர லொறிகளின் உரிமையாளர்களும் சாரதிகளும் தயக்கம் காட்டி வருகின்றனராம்.

இதனால் மா விநியோகம் ஒழுங்கற்ற முறையில் இடம் பெறுகிறது என்று சொல்லப்படுகிறது.

இதைத் தொடர்ந்தே ஊக்குவிப்பு — பாதுகாப்பு வழங்கும் திட்டத்தை உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது. (இ-எ)

# படையினரின் உதவியுடன் அஷ்ரப் கிழக்கே செல்வார்

கொழும்பு, ஜூலை 28

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கு விஜயம் செய்து நிலைமையை நேரில் பார்வையிட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரபுக்கு உதவ பாதுகாப்பு அமைச்சு முன்வந்துள்ளது.

ஜனாப் அஷ்ரப்பை பாதுகாப்புப்படையினர் அப்பகுதிகளுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா கடந்த வியாழன் தன்னைச் சந்தித்துப் பேசிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழுவிடம் உறுதியளித்தார்.

அத்தூதுக்குழுவுக்கு ஜனாப் அஷ்ரப் தலைமை வகித்தார். (இ-எ)

# நெருக்கடியை நீக்க பொறியியலாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடத்தப்படும் வானத் தாக்குதல்கள், மக்கள் உயிரிழப்பு, உடைமைகள் நாசம் உணவு-எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாரம் இல்லாமை, கைத்தொழில் உற்பத்தி மற்றும்போக்குவரத்துஸ்தம்பிதம் என்பன குறித்து—

யாழ்ப்பாணம் பொறியியலாளர்கள் இலங்கையில் உள்ள தொழில்சார்பு நிறுவனங்களினதும், சர்வதேச சமூகத்தினதும் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இப்போது நடைபெற்று வரும் அனர்த்தங்கள், அதனால் மக்கள் படும் அவலங்கள், உயிர் உடைமைச் சேதங்கள், மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டமை என்பன குறித்து விவரமான அறிக்கை ஒன்றை யாழ். பொறியியலாளர்கள் தயாரித்துள்ளனர்.

யுத்தத்தினால்மக்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்தும் அவர்கள் அகதிகளாகி உள்ளது பற்றியும், வெளிமாவட்டங்களில் இருந்து லட்சக்கணக்கில் மக்கள் அகதிகளாகிக் குடாநாட்டுக்கு வந்து சேர்ந்துள்ளது குறித்தும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களின் உளவியல் பாதிப்பும், பதற்றமும் நிலைமையை மோசமாக்கி உள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியை நீக்க வேண்டியது அவசியம் எனவும் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. [அ]

## கடைக்கு சென்றவரை பாம்பு தீண்டியது

பச்சிலைப்பள்ளி, ஜூலை 28

மண்ணெண்ணெய் வாங்குவதற்கு கடைக்குச் சென்றவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் பளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இச்சம்பவம் இந்திராபுரத்தில் இடம்பெற்றது. சாமுவேல் மாணிக்கம் (வயது 34) என்பவரே பாம்பினால் கடியுண்டவர் ஆவார். (இ-117)

# அகதிகள் பராமரிப்புக்கு டிசம்பர் வரை ரூ. 10 கோடி

கொழும்பு, ஜூலை 28

இலங்கைத் தமிழ் அகதிகளைப் பராமரித்து மறுவாழ்வு அளிக்க, எதிர்வரும் டிசம்பர் மாதம் வரையான ஆறுமாத காலத்துக்கு பத்துக் கோடி ரூபா தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைச் செயலாளர் திரு. எம். எம். இராஜேந்திரன் சென்னையில் செய்தியாளரிடம் நேற்று இதனை வெளியிட்டார்.

இதனிடையில் சுமார் 3 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று முன்தினம் (வியாழன்) இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தனர்.

12 படகுகளில் யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த 400 தமிழர்கள் நாகபட்டினத்துக்கும் 9 குடும்பங்களைச் சேர்ந்த 50 இலங்கைத்தமிழர் புதுக்கோட்டைப் பட்டினத்துக்கும் போய்ச் சேர்ந்தனர். [இ-எ]

# கொழும்பிலுள்ள தமிழருக்கு வாகன ஒழுங்கு இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 28

கொழும்பில் நிர்க்கதியாகி உள்ள தமிழர்களை யாழ்ப்பாணம் அழைத்து வர முயற்சிகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் இருந்து கொழும்பு சென்று நிர்க்கதி நிலையில் உள்ள தமிழர்களை அந்த அந்தப் பகுதிகளுக்கு அனுப்ப கல்வி துணை அமைச்சர் திருமதி மனோகரி புலேந்திரனால் இருதடவை வாகன அணி ஒழுங்கு செய்யப்பட்டது.

இதுபோன்று இனி வாகன அணி ஒழுங்கு செய்யப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

# அர்த்தமற்ற தாக்குதல்கள் உடன் நிறுத்தப்படவேண்டும்

## சிறுவர் கழக சம்மேளனம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 28

அன்பு, அமைதி, சமாதானம்,சகோதரத்துவம்போன்ற சிந்தனைகளை விதைக்க வேண்டிய எங்கள் சிறுவர்களின் உள்ளத்தில் வேதனையையும், விரக்தியையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் அரசபடைகளின் அர்த்தமற்ற தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

அறவழி நல்லொழுக்கச் சிறுவர் கழகங்களின் சம்மேளனம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்த தர்மத்தை கடைப்பிடிப்பதாகச் சொல்லிக் கொள்ளும் இலங்கை அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகளால் தமிழ்ச் சிறுவர்கள் படுகொலை செய்யப்படுவதற்கும் அரசின் இராணுவ நடவடிக்கைகளினால் உளவியல் ரீதியாக சிறுவர்கள் பாதிக்கப்பட்டு வருவதற்கும் எமது ஆட்சேபனையையும் கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## நிபந்தனையே....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

துச் செல்ல இணங்கினோம். அரசு தனது வரட்டுக் கௌரவத்தின் காரணமாக அவர்களைக் கூட்டிச் செல்லவில்லை. அதனால் இரு படையினர் உயிரிழந்தனர்.

வைத்தியசாலையைத் திறந்தால்தான் காயமுற்றோரை கூட்டிச் செல்ல அனுமதிப்போம் என்று நாம் எப்போதும் கூறவில்லை.

அதேவேளை, சிங்கள அரசு தமிழீழத்தில் உள்ள மிகப் பெரிய போதனா வைத்திய சாலையைக் குண்டு வீச்சுக்களை நடத்தி மூடி வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழீழத்தில் எந்த மாவட்ட வைத்திய சாலையும் இயங்கவில்லை. தமிழ் மக்கள் சரியான வைத்திய வசதியின்றி இறந்து வருகின்றனர்.

உதாரணமாக, எங்கும் "எக்ஸ்-ரே" இயந்திரம் கிடையாது. சத்திர சிகிச்சை செய்ய ஒக்சிஜன் கிடையாது.

இரத்தத்தை சேமிக்கவும், பாதுகாக்கவும்,மருந்துகளைப் பாதுகாக்கவும் சத்திர சிகிச்சைகள் செய்யவும் மின்சாரம் கிடையாது.

-என்று குறிப்பிடப்பட்டுள்ளது. [உ-9]

## தமிழர் கைதாவது தொடர்கிறது

கொழும்பு நகரிலும், அதன் சுற்று வட்டாரங்களிலும் தமிழர் தொடர்ந்து கைதுசெய்யப்படுகிறார்கள்.

வீதிகளில் செல்லும் தமிழர்களை படையினர் மறித்து விசாரித்து சந்தேகம் இருந்தால் கூட்டிச் செல்கிறார்கள்.

படையினரால் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும்படி கோரினால், மூன்று மாதத்தின் பின் வாருங்கள், விடுதலை செய்வோம் என்று கூறப்படுகிறதாம். (இ-3)

## வவுனியா வங்கி ஊழியருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை28

வவுனியா இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள் வவுனியா இலங்கை வங்கி பிரதேச அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வங்கித் திறப்பு வைத்திருக்கும் உத்தியோகத்தர்கள் உட்பட அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு, இலங்கை வங்கி வன்னிப் பிராந்திய முகாமையாளர் திரு.ந.சிவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# வலி-வடக்கு மல்லாகத்தில் பிரதேசசபை இயங்குகிறது

காங்கேசன்துறை, ஜூலை 28

வலி-வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை உப-அலுவலகம் ஆகியன மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இயங்கிவருகின்றன.

இந்த அலுவலகங்களில் கடமை யாற்றும் சகல ஊழியர்களையும் உடனடியாக வேலைக்கு வருமாறு வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா அறிவித்துள்ளார்.

அந்தப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தமது வேலைகளை புதிய இடத்தில் செய்யுமாறும் அவர் கோரியுள்ளார். (இ-68)

## ஒத்திவைப்பு

காங்கேசன்துறை, ஜூலை28

குப்பிளான் கற்கரைக்கற்பக விநாயகர் தேவஸ்தான உற்சவம் தற்போதைய சூழ்நிலை காரணமாக ஒத்திப்போடப்பட்டுள்ளது. (இ-68)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### நல்லைப் பதிமுருகா!

நண்ணுமடி யார்களுக்கு நாளுமருள் பாலிக்கும்
பண்ணைசூழ் நல்லைப் பதிமுருகா!—மண்ணகத்தில்
வல்ல உரிமை நாம்பெறவே நல்லருளை
நல்ல தமிழிறைவா நல்கு.

கவியரசு, வெண்பாமணி:
முருககூரியன்.

[இன்று [illegible] சுவாமி 2 ஆம் திருவிழா]

## ஜீ. சி. ஈ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்புமாறு கோரியிருந்தார்.

நேற்று மாலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பிரதிநிதிகள் பரீட்சை முடிவுகளை யாழ்ப்பாணம் கொண்டு வந்தனர்.

### அதிபர்களிடம் சேர்ப்பிக்க உத்தரவு

பரீட்சை முடிவுகளை இன்று காலை 9 மணிக்கும் 10 மணிக்கும் இடையில் யாழ். கல்வித் திணைக்களத்தில் வந்து பெற்றுக்கொள்ளும்படி சகல உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

கல்விப் பணிப்பாளர் திரு. சுந்தரலிங்கம் நேற்று மாலை விடுத்த, பத்திரிகைக் குறிப்பு ஒன்றின்மூலம் இந்தப்பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்று காலை பெற்றுக் கொள்ளும் பரீட்சை முடிவுகளை இன்று பி. ப. 4 மணிக்கு முன் சகல பாடசாலை அதிபர்களிடமும் சேர்த்து விட ஆவன செய்யுமாறும் அந்தக் குறிப்பில் மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-3-9)

## புலிகளின்---

யாழ். ஆஸ்பத்திரி திறக்கப்பட வேண்டும்'' — என்ற தனது கோரிக்கையை விடுதலைப் புலிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு உணர்த்தியதாக (Feeler) அமைச்சர் விஜேரத்தினா செய்தியாளர் மாநாட்டில் கூறினார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## மீசாலையில்

யாழ்ப்பாணம், ஜூலை 28

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவ விழா இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாட்கள் தொடர்ந்து நடைபெறும். எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் தேர், தீர்த்தத் திருவிழாக்கள் இடம்பெறும். [இ-7]

## அச்சுவேலியில் வீடுகள் சேதம்

அச்சுவேலி, ஜூலை 28

அச்சுவேலிப் பகுதியில் ஹெலியிலிருந்து அடிக்கடி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. வியாழக்கிழமைமாலை மேற்கொள்ளப்பட்டஹெலித் தாக்குதலில் 3 வீடுகள் சேதமடைந்தன (இ-11)

## மானிப்பாய் புனித அன்னம்மாள் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலய வருடாந்த உற்சவ இறுதித் தினமான நாளை ஞாயிறு காலை 6 மணிக்கு கூட்டுத்திருப்பலியும், அதனைத் தொடர்ந்து புனித அன்னம்மாளின் திருபவனியும் நடைபெறும். (ஒ)

## சம்பள முற்பணம் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்.பிராந்திய கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட சமயாசமய ஊழியர்களுக்கு சம்பளமுற்பணம் வழங்கப்படமாட்டாது என்று யாழ். கல்வி அலுவலக உயர் அதிகாரி தெரிவித்தார்.

இதே போன்று ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித்திட்டங்களில் கடமை புரியும் ஊழியர்களுக்கும் சம்பள முற்பணம் வழங்கப்படமாட்டாது என்றார் அவர். (இ-3)

## முஸ்லிம் அகதிகளுக்கு முகாம்கள்

கொழும்பு, ஜூலை 28

கிழக்கு மாகாணத்தில் இருந்து வெளியேறிய முஸ்லிம் அகதிகளுக்கு என்று பொலன்னறுவையில் மூன்று நிரந்தர முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. (இ-எ)

## திரிசாரணர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். மாவட்ட திரிசாரணர் குழு— நல்லூர் பிரிவினருக்கான விசேட கூட்டம் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு செங்குந்தா இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சகல உறுப்பினர்களும் அதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## விமானக்---

மாக இக்குண்டுகள் வானத்தை நோக்கிச் சென்றன.

தாக்கும் பொருளை தீப்பிடிக்கச் செய்யும் இந்தக் குண்டுகள் வானத்தை நோக்கித் தீர்க்கப்பட்டதை அடுத்து, விமானங்கள் தாழப் பறப்பதைத் தவிர்த்துக் கொண்டதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (ஒ-9-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியதோர் சேவை!
★ குறுகிய காலத்தில் ★
தரமான கலர் பிலிம்
கழுவுவதற்கு
Cosmos Marketing Services
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,

உதயன்

28 - 7 - 1990 சனிக்கிழமை

வெளிநாட்டில் உள்ள உங்கள் உறவினர்களுக்கு
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக
★ கடிதங்கள் ★ பார்சல்கள்
★ தஸ்தாவேஜுக்கள் அனுப்ப
DHL WORLDWIDE EXPRESS
337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு ஆசிரியரின் ஜூன், ஜூலை சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்-மாவட்ட ஆசிரியர்களுக்கான ஜூன், ஜூலை மாதங்களுக்கான சம்பளக் காசோலைகள் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு நேற்று அனுப்பப்பட்டன.

யாழ்-இலங்கை வங்கிக்கு கொழும்பில் இருந்து உத்தரவு கிடைத்ததை அடுத்து யாழ்- கல்வி அலுவலகத்தால் இந்தக் காசோலைகள் வழங்கப்பட்டன.

கொத்தணி அதிபர்கள் காசோலைகளை கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்று ஆசிரியர்களுக்கு வழங்குவார்கள்.

ஜூன் மாதச் சம்பளத்துடன் கஷ்ட நிவாரணப்படி அரை மாதச் சம்பளமும் சேர்த்து வழங்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதச்சம்பளத்தில் ஜூன் மாதம் வழங்கப்பட்ட சம்பள முற்பணம் கழித்து வழங்கப்பட்டுள்ளது. (இ - 3)

## கல்முனை பிரஜைகள் குழு தலைவர்கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 28

கல்முனை பிரஜைகள் குழுத் தலைவர் பாண்டியூரான் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது மகனும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இராணுவத்தினர் நடத்திய சுற்றி வளைப்பின்போது இவரும், மகனும் கைது செய்யப்பட்டனர் என்றும், பின் சூட்டுக் காயங்களுடன் எரிந்த நிலையில் இவர்களது சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ - 3)

## மட்டக்களப்பு: கொலைகள் தொடர்கின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 28

மட்டக்களப்பு நகரில் அமைதி நிலவுகின்றபோதும் தினமும் எவராவது ஒருவர் கொல்லப்படுகின்றார் என்றும் சடலத்துக்குஅருகில் பி. ஆர் ஆர் எவ். என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு நகரில் படையினர் நிலைகொண்டுள்ளனர், மக்கள் பகலில் ஓரளவு வீதிகளில் நடமாடுகிறார்கள் வங்கிகள் அலுவலகங்கள் இயங்கவில்லை. (இ-3)

## உணவுப் பொருள் கப்பல் இன்று வந்து சேரும்!

யாழ்ப்பாணம், ஜூலை 28

கொழும்பில் இருந்து அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வந்து முல்லைத்தீவில் தரித்து நின்ற கப்பலில் இருந்து. நேற்று உணவுப் பொருள்களை இறக்கும் வேலைகள் இடம்பெற்றன.

பெரும்பாலும் நேற்று மாலையேபொருள்களைஇறக்கும் வேலைகள் பூர்த்தியடையும் என்றும்—

இன்று நண்பகல் அளவில் இந்தக் கப்பல் பருத்தித்துறையை வந்தடையும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. (உ-3,

## கோப்பாய், கைதடியிலும் ஹெலி தாக்குதல் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

கோப்பாய், கைதடிப் பகுதிகளில் நேற்று முன் தினம் [வியாழன்] இரவு இரண்டு ஹெலிக் கொப்டர்களிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

கோப்பாய் சந்தியில் நின்ற வான் ஒன்றை நோக்கியும், கைதடிப்பாலம் வழியாக சைக்கிளில் சென்றோரை நோக்கியும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன,

ஆனால் தெய்வாதீனமாக எவரும் காயமடையவில்லை.

## கிளிநொச்சிப் பகுதி
## வழமைக்குத் திரும்பிய பின்பே அத்தியாவசியப் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 28

கிளிநொச்சியில் நிலைமை வழமைக்குத் திரும்பிய பின்னரே அப்பகுதிக்கு அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படும்.

கிளிநொச்சி அரச அதிபர் திரு.கே.மாணிக்கவாசகர் நேற்று மாலை கொழும்பில் உள்ள அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் திரு.தேவநேசன் நேசையாவுடன் தொடர்பு கொண்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

## அரச அதிபர் நடத்தும் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ்.மாவட்டத்தில் உணவுப் பங்கீடு, நிவாரணம் தொடர்பான கூட்டம் இன்று சனி காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறும்.

உதவி அரசாங்க அதிபர்கள், திணைக்கள அதிகாரிகள் கலந்து கொள்ளும் இந்தக் கூட்டத்தை யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கூட்டியுள்ளார். [இ-3]

## நல்லூர் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நேற்றுக்காலை பத்து மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஆலயச் சூழலில் அடியார்கள் கூட்டம் காணப்பட்டது.

நேற்று குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அடியார்கள் வந்திருந்தனர். (இ-5)

## ஒரு கிலோ மா விநியோகம்

திருநெல்வேலி, ஜூலை 28

நல்லூர் ப.நோ.கூ. சங்க திருநெல்வேலிச் சந்திக்கிளையில் பங்கீட்டு அட்டை உள்ளவர்களுக்கு ஒரு கிலோ வீதம் மா விநியோகிக்கப்பட்டது.

எனினும் பங்கீட்டு அட்டை உள்ள முழுப் பேருக்கும் இந்த மா கிடைக்கவில்லை எனத்தெரிவிக்கப்பட்டது. (ஒ-143)

## சம்பத்திரிசியார் மாணவருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியின் கனிஷ்ட செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்களுக்கும், உயர்தர மாணவர்களுக்குமான கலந்தாலோசனைக் கூட்டம் ஒன்று இன்று காலை பத்து மணிக்கு நடைபெற உள்ளது.

கல்லூரியில் நடக்கும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தை விரைவில் பிடிப்போம்!

## அமைச்சர் ரஞ்சனின் நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 28

யாழ்ப்பாணத்தை விரைவில் கைப்பற்றப் போகிறோம்.

செய்தியாளர் மகாநாட்டில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா இப்படி நம்பிக்கை தெரிவித்தார் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

## வெளியுறவு அமைச்சர் வேறுவிதமாகச் சொல்கிறார்!

புதுடில்லி, ஜூலை 28

இலங்கையில் நடக்கும் யுத்தத்தை நிறுத்த இந்தியா முயற்சி செய்து வருவதாக ஜனாதிபதி வெங்கட்ராமன் தெரிவித்திருக்கும் அதே வேளை—

இலங்கையின் விவகாரங்களில் இந்தியா தலையிடமாட்டாது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

தெற்காசியநாடுகளிடையேயான ஒத்துழைப்பு பற்றிய இரண்டு நாள் கருத்தரங்கு ஒன்றை இந்திய வெளியுறவு அமைச்சர் இந்தர்குமார் குஜ்ரால் நேற்று அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். அப்போது அவர் சொன்னதாவது:-

இலங்கையில் இடம்பெறும் சம்பவங்கள் எமக்கு பாரதூரமான கவலையை தருவனவாக இருந்தாலும், இலங்கையின் விவகாரங்களில் இந்தியா தலையிட விரும்பவில்லை.

கடந்த ஏழு ஆண்டுகளிலும் இருந்ததிலும்பார்க்க இந்திய-இலங்கை உறவுகள் நல்ல நிலைமையில் தற்போது உள்ளன -என்றரர். (அ-எ)

## விலை உயர்வு

ஒரு பீப்பா மசகு எண்ணெய்யின் விலையை மூன்று டாலர்களால் உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின்(ஒப்பேக்) மாநாட்டின் இறுதியில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது. (அ)

## நாளை இலக்கிய சந்திப்பு

மூத்த பத்திரிகையாளரும் எழுத்தாளருமான சசிபாரதி சு. சபாரத்தினத்தின் அறுபதாண்டு நினைவினையொட்டி இன்று இலக்கியச் சந்திப்பு ஒன்று நடைபெறுகிறது.

காலை 9.30 மணிக்கு நல்லைஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் ஆரம்பமாகும் இச் சந்திப்பில் 'பத்திரிகையாளனும் இலக்கியமும்'', 'குறுங்கதைகளின் இலக்கிய அந்தஸ்து' ஆகிய பொருள்கள் பற்றி சிறப்புரைகள் இடம்பெறும்.

இச்சந்திப்பில் பல இலக்கிய கர்த்தாக்களும், பத்திரிகை மாணவர்களும் வாழ்த்துரைகளும் வழங்குவர். [அ]

## அச்சுவேலியில்

காங்கேசன்துறையில் வீரமரணமடைந்த வீரவேங்கை ஹமீதுக்கு (சின்னத்துரை இராசலிங்கம் - நாவற்காடு அச்சுவேலி) அஞ்சலி தெரிவித்து அச்சுவேலியில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

## மரண அறிவித்தல்

### திருமதி நேசமணி இராசையா

பெருமாள் கோயிலடியைச் சேர்ந்த திருமதி நேசமணி இராசையா காலமானார்.

இவர் காலஞ்சென்ற புரொக்டர் இராசையாவின் (கொட்டடி) அன்பு மனைவியும், சாவித்திரி, பரிமேலழகன் (லண்டன்), நித்தியானந்தன் (கணக்காளர்- இ. போ. ச., கோண்டாவில்), ஸ்ரீரங்கன் (கணக்காளர் – கல்வித் திணைக்களம், மட்டக்களப்பு), சத்தியபாமா, ஜெயராணி, ஜனக்குமார் (அசோகா ஜுவலர்ஸ் உரிமையாளரும், ரியூசன் ஆசிரியரும்), சிவக்குமாரி, விஜயகுமாரி, காலஞ்சென்ற அசோக் இளமுருகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சபாநந்தன் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்), வசந்தி (லண்டன்) ஜமுனகுமாரி (இ. போ. ச. - கோண்டாவில்), இந்திரா, சுமதி (லண்டன்), ஸ்ரீநிவாசன், ஸ்ரீதயக்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், வடக்கு அராலி முருகமூர்த்தி ஆலயத்திற்கும், அராலி தேவாலயத்திற்கும் அருகில் இருக்கும் அன்னாரின் தற்போதைய இல்லத்திலிருந்து நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அராலி வடக்கு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ஜனக்குமார்
(அசோகா ஜுவலர்ஸ்)

(13695)

## யாழ். நிலை---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து, மின்சாரம், வங்கிகள், உணவு, தபால் சேவைகள் குறித்து முழு அளவிலான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தது.

அதனை அடுத்து தற்போதைய நிலை குறித்து முழு அறிக்கை ஒன்றை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை தயாரித்து கொழும்புக்கு நேற்று அனுப்பி வைத்தது.

இந்த அறிக்கை உரிய நடவடிக்கைகளுக்காக ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகத்துக்கு அனுப்பப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. (உ-3)

## மரண அறிவித்தல்கள்

### திரு. குமாரசுப்பிரமணியம் - இராஜ்பாபு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர் இ. குமாரசுப்பிரணியம் ஞானம் தம்பதிகளின் அருமை மகன் இராஜ்பாபு (26-7-90) வியாழன் காலமானார். இவரது ஈமக்கிரியைகள் யாவும் அன்று நடைபெற்றது. இவ் அறிவித்தலை யாவருக்கும் தெரியப்படுத்துகின்றோம்.

தகவல்:-
இ. குமாரசுப்பிரமணியம்

(13842)

### சரவணமுத்து கந்தையா

(ஓய்வு பெற்ற D. O. R நில அளவைத் திணைக்களம்)

கேணிக்கரை அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சரவணமுத்து கந்தையா (ஓய்வு பெற்ற D. O. R நில அளவைத் திணைக்களம்) காலமாகி விட்டார். இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஞானகணேசன் (சமூக சேவைகள் திணைக்களம்), ஞானகுமாரன் (Arton Laboratories Ltd). ஞானம்பிகை (U. K), ஞானலோசனி (Canada), ஞானசேகரன் (ஆசிரியர்), ஞானசக்தி (Canada), ஞானச்செல்வி (France), ஞானசரவணபவன் (தொலைத் தொடர்பு திணைக்களம்), ஆகியோரின் அன்புத் தந்தையும்; செல்வமலர், சுகுணாதேவி, ஈஸ்வரன், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், ராஜேஸ்வரி, சிறீகுமார், குமார், சியாமளா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (27-07-90) மாலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதைக் கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஞானகணேசன்,
கேணிக்கரை,
அளவெட்டி வடக்கு.

(13843)

# இந்தியாவுக்கு எதிராக கூச் 333 ஓட்டங்கள்!

லண்டன் ஜூலை 28

இந்தியாவுக்கு எதிரான முதலாவது கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸின் இரண்டாவது நாளில் 4 விக்கெட்டுகள்இழப்புக்கு 653 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இங்கிலாந்து அணியின் கப்டன் கிரகாம் கூச் 333 ஓட்டங்களை எடுத்தார்.

லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த கிரிக்கெட் டெஸ்ட் ஒன்றில் ஆகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற துடுப்பாட்ட வீரர் என்ற பெருமையைஇதன்மூலம் கிரகாம் கூச் பெற்றுள்ளார். (உ -எ)

# மக்களை பூண்டோடு அழிக்க அரசு கங்கணம் கட்டியுள்ளது

## போக்குவரத்து ஊழியர் சங்கம் கண்டனம்

வடக்கு-கிழக்கில் வாழும் மக்களை பூண்டோடு அழிக்க அரசு திட்டமிட்டுத் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக—

தமிழ் பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் அங்கம் வகிக்கும் பிரஸ்தாப சங்கத்தின் விசேட கூட்டம் நேற்று நடைபெற்ற போது கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஸ்ரீலங்கா பேரினவாத அரசினால் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக பிரகடனப்படுத்தியுள்ள [illegible] னால் லட்சக்கணக்கான தமிழ் மக்கள் தமது சொ[illegible] யும், உடைமைகளையும், உறவினர்களையும், இழந்து அகதிகளாக உள்நாட்டிலும், தமிழ் நாட்டிலும் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அத்தோடு விமானக் குண்டு வீச்சினால் ஆயிரக் கணக்கான அப்பாவி மக்கள் உயிர்களை இழந்தும் அங்கவீனர்களாயும் உள்ளனர்.

மருத்துவ வசதி சீர்குலைந்துள்ள வேளையில் கொடிய கிருமிகளைப் பரப்பும் இரசாயனக் குண்டுகளை விமானத்தில் இருந்து ஏவியும், திட்டமிட்டு மக்களை பூண்டோடு அழிக்க அரசு கங்கணம் கட்டியுள்ளது. இந்த நிலையையும் வடக்கு, கிழக்கில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள பொரு[illegible] தொழிற் சங்கம் வன்மையாக [illegible] ளது. (அ)

## அவசர இரத்த மாற்றீட்டுச் சேவை

- தானத்தில் சிறந்தது இரத்ததானம்!
- இரத்த தானம் செய்வது தொண்டுகளில் அளப்பரியது !!
- ஏனைய தொண்டுகளைச் செய்ய இயல்பில்லாதவர்கள் இரத்ததானம் செய்து தொண்டு புரிந்த மனத்திருப்தியைப் பெறலாம் !!!

அன்பான பொதுமக்களே!

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் பொது மக்களின் அனாவசிய உயிரிழப்பைத் தடுக்கவும், யாழ். பொது மருத்துவமனை இரத்த வங்கியின் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், யாழ். பரியோவான் கல்லூரி ''இன்ரறக்ட்'' கழகத்தினரும், உதயன் பத்திரிகை நிறுவனத்தினரும் இணைந்து இரத்த மாற்றீட்டுச் சேவை என்னும் திட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

★ 16 வயதிற்கு மேற்பட்ட சேவை மனப்பான்மை கொண்ட— எவ்வேளையிலும் இரத்தம் வழங்க — தயாராகவுள்ள அனைவரும் இத்திட்டத்தில் அங்கத்தவராகலாம்.

★ அங்கத்தவராக விரும்பும் எவரும் பரியோவான் கல்லூரி ''இன்ரறக்ட்'' கழக உறுப்பினரிடமோ அல்லது உதயன் பத்திரிகைப் பணிமனையிலோ தங்கள் பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

★ இரத்ததானம் செய்வோருக்கு அங்கீகரிக்கப்பட்ட அடையாள அட்டை வழங்கப்படும்.

★ இரத்ததானம் செய்தோரின் குடும்பத்தினருக்கு இரத்தம் தேவைப்படும் பொழுது அவர்களுக்குத் தேவையான இரத்தத்தை வழங்க முன்னுரிமை அளிக்கப்படும்.

★ இரத்ததானம் செய்பவர்களுக்கு பிரயாண வசதி அல்லது அதற்குரிய செலவு மற்றும் உணவும் வழங்கப்படும்.

★ மக்களே! உங்கள் ஒரு துளி இரத்தம் பெறுமதி வாய்ந்த ஓர் உயிரைக் காப்பாற்றப் போகிறது என்பதை மனதிற்கொண்டு இத்திட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள்.

உயிர் காப்பது இரத்த தானமே!

உதயன் வெளியீட்டகம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இன்ரறக்ட் கழகம்
பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org